

வி.ஐ.பி. ரவுண்ட் அப்

# ஹை... புது பாப்பா வந்திருக்கே...!

## இது சுதா ரகுநாதன் வீட்டுக் கொண்டாட்டம்

**“இருபது வருஷம் முன்பு எனக்குக் கல்யாணம் ஆன புதுசு. விநாயகர் சதுர்த்தி அன்னிக்கு என் ஃபிரெண்ட் ஒருத்தி வீட்டுக்குப் போயிருந்தேன். வெற்றிலை, பாக்கு, மஞ்சளோட ஒரு அழகான சந்தனப் பிள்ளையாரை கொடுத்தாள்.**

**வீ**ட்டுக்கு வந்தவுடன் முதல் வேலையா ரொம்ப சந்தோஷமா அவரை அலமாரியில் வைச்சேன். அப்புறம் அதே மாதிரி நாலைந்து பிள்ளையார்கள் எதேச்சையா வந்தன. அதுக்கப்புறம் எனக்கே ஒரு ஆசை வந்து வித விதமான பிள்ளையார்களை எங்க பார்த்தாலும் வாங்கிடுவேன். இன்னிக்கு எங்கள் வீட்டு விநாயகர் குடும்பம் ரொம்பப் பெரிதாகிவிட்டது” என்று மோகனமாகச் சிரித்தார் பாடகி சுதா ரகுநாதன்.

**இடம் :** சென்னை ராஜா அண்ணாமலை புரத்திலுள்ள அவரது அழ்கான வீட்டு வரவேற்பறை. ‘எங்கெங்கு காணினும் சக்தியடா’ என்று மகாகவி பாடியது போல, அந்த வரவேற்பறையில் ‘எங்கெங்கு காணினும் கலர்புல் விநாயகரடா’ என்று பாடலாம். முழுக்க முழுக்க ஆறு கண்ணாடி அலமாரிகளில் திரும்பிய இடமெல்லாம் நிரம்பி வழியும் கணேசர்களின் மொத்த எண்ணிக்கை அறுநூறுக்கும் மேல்!

சட்டென்று பழைய நினைவுகளில் மூழ்கி ஒவ்வொரு பிள்ளையாரையும் எடுத்து செல்லமாகத் தடவிக் கொடுத்துக் குழந்தையானார் சுதா. அங்கேயுள்ள ஒவ்வொரு மூஷிக வாகனனும் தன் வீட்டுக்கு வந்த கதையை மாதம், தேதி

தவறாமல் படபடவென்று அவர் சொன்னது பிரமிப்பாக இருந்தது. நம்முடைய விரல் நகம் சைஸில் உள்ள துளியூண்டு பிள்ளையாரி லிருந்து சுமார் இரண்டடி உயர ராஜ கம்பீர விநாயகர் வரை வெவ்வேறு வடிவத்திலிருக்கும் ஒவ்வொன்றும் ஒரு அழகு!

ஆறு தலைப் பிள்ளையார், பன்னிரண்டு கைகளில் ஆயுதங் களுடன் அட்டகாசமாக நிற்கும் மர விநாயகர், படமெடுத்து ஆடும் நாகப்பாம்பின் தலையில் நின்று கையில் வீணையுடன் காளிங்க நர்த்தனம் ஆடும் கணபதி என்று சுதாவின் கணேச கலெக்ஷனில் திகட்டாத திகைப்புகளும் பல உண்டு.

"எல்லாம் விலை அதிகமோ?"

"அப்படிச் சொல்லமுடியாது. பத்து ரூபாயிலிருந்து பத்தாயிரம் ரூபாய் வரை உள்ளன. சொல்லப் போனால் மிக அழகானவைகளை ஐம்பது, நூறுக்கெல்லாம்கூட வாங்கியிருக்கேன். கிரிஸ்டல், ரூபி, எம்ரால்டு, தங்கம், பவழம், முத்து என்று பல மெட்டல்களில் செய்யப் பட்டவையும் உண்டு. இதில் விலை முக்கியமில்லை. விநாயகருக்கு ஏது விலை?'' என்றவர், அடுத்துள்ள அலமாரிக்கு அழைத்தார்.

"வலப்பக்கம் தும்பிக்கையுள்ள வலம்சுழி விநாயகர், வெள்ளெருக்கு விநாயகர், பவழ விநாயகர் போன்ற இதெல்லாம் ரொம்ப அபூர்வ மானவை. வட இந்தியாவில், வெளி நாடுகளில் எங்கேயாவது கச் சேரிக்குப் போகும்போது, அதிர்ஷ்ட வசமாய் என் கண்ணில் பட்டவை. எப்போவாவது நேரம் கிடைத்து ஷாப்பிங் போகிறபோது என்னை யறியாமல் வித்தியாசமாக விநாயகர் கிடைக்கிறாரா என்று என் மனதுக்குள் ஒரு எண்ணம் அலைபாயும் - இத்தனைக்கும் சில சமயங்களில் நான் வாங்கப் போகிற பொருட்கள் வேறாக இருந்தா லும்..." பட்டுப்புடவை பள்ளுவை சரிசெய்தபடியே உற்சாகமாகப் பேசினார். அதே சமயம், வித்தி



**ஆறு தலையுடன் பிள்ளையார், காளிங்க நர்த்தனமாடும் கணபதி... என்று சுதாவின் கணேச கலெக்ஷனில் திகட்டாத திகைப்புகள் பல உண்டு!**

யாசம் என்பதற்காக கம்ப்யூட்டர் பிள்ளையார், கிரிக்கெட் பிள்ளை யார் என்கிற ரீதியில் தெய்வீகத்தை காமெடியாக்குவதை எப்போதும் விரும்புவதில்லையாம் சுதா.

இவரது பிள்ளையார் குடும்பத் தில் ஒவ்வொரு முறையும் ஒரு புதிய வரவு வரும்போது அன்று வீடே களைகட்டி விடுமாம்!

"புது பாப்பா வந்திருக்கு என்று கொண்டாடுவோம். அதை எந்த இடத்தில் வைப்பது என்று சுவாரஸ்யமாக கொஞ்ச நேரம் விவாதம் நடக்கும். நான் ஒன்று சொன்னால், கணவர் ரகு வேறு ஐடியா கொடுப்பார். இறுதியில் என் மகள் மாளவிகாவின் முடிவுக்கு விட்டுவிடுவோம்" என்று ஜாலியாக சொன்ன மனைவியை இடைமறித்தார் கணவர் ரகுநாதன்.

"விக்ரகங்களை சேர்க்கறது பெரிய விஷயம் என்றால் அவற்றை பாதுகாப்பது அதைவிட பெரிய காரியம். எங்களைப் பொறுத்த வரை அது சுகமான வேலை! வாரத்திற்கு ஒருமுறை தூசி தட்டினாலும், வருஷத்திற்கு ஒரு தடவையாவது துடைத்து, பாலிஷ் போடுவோம். ஐந்து மணி நேரம் ஆகும். வருஷா வருஷம் பிள்ளையார் சதுர்த்திக்கு இரண்டு நாள் முன்னாடி இந்த வேலையை ஆரம்பித்து விடுவோம்...'' என்று ரகு சொல்லும் போதே, "போப்பா!.. நாங்க எல்லா பிள்ளையாரையும் துடைத்தால், நீ நாலைத் துடைத்துவிட்டு பேர் வாங்கறியா?" என்று செல்லமாக கலாய்த்தார் மகள் மாளவிகா.

**விடை பெறும் நேரம்...**

"இந்த இருபது வருஷத்தில் எங்கள் வீட்டுக்கு விநாயகர்கள் மட்டுமா வந்தார்கள்? எனக்கு பேரும் புகழும் அல்லவா கொண்டு வந்தார்கள்? எத் தனையோ விருதுகள், பட்டங்கள், பத்மஸ்ரீ கூட வந்துவிட்டது! நான் வீட்டிலிருக்கும் நேரத்தில் இதே ஹாலில் உட்கார்ந்து கல் யாணியையும், காம்போதியையும் சாதகம் செய்யும் போது, சட்டென்று மூடிய கண்களை திறப்பேன். இந்த விநாயகர்கள் தான் ஆடியன்ஸ் போல் உட்கார்ந்து தலையசைப்பது போல ஒரு பிரமை ஏற்படும். நாம் பாடும் சங்கீதத்தில் சத்தியம் இருந்தால் கடவுள் நாம் கேட்காமலேயே எல்லாம் கொடுப்பார் என்பதை உறுதியாக நம்புபவள் நான்..." அது வரை உற்சாகமாக பேசிக் கொண் டிருந்த சுதா சட்டென்று கண் களில் நீர் பனிக்க நர்த்தன விநாய கரைத் தடவியபடி அமைதி யானார்!

'நீ ஆத்மார்த்தமாக பாடு. நான் ஆடுகிறேன்..' என்று அந்த ஆனந்த விநாயகர் சொல்வது போல் இருந்தது.

**- வி. சந்திரசேகரன்**

**படங்கள் : சித்ரம் மத்தியாஸ்.**